**செய்தி வெளியீடு எண் : 1018** **நாள் : 22.07.2024**

## சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை
## பாலின வரவு செலவு திட்டம் பயிற்சி

பாலின நிதிநிலை அறிக்கை சமூகத்தில் பாலின சமத்துவத்தை உறுதி செய்கின்றது. பாலின வரவு செலவுத்திட்டம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வது பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை உறுதி செய்வதற்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாக அடையாளம் காட்டப்படுகின்றது.

மாண்புமிகு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களால், சட்டமன்ற பேரவை கூட்டத்தில் 21.04.2022 அன்று தமிழ்நாட்டில் பாலினம் குறித்த நிதி நிலை அறிக்கையை உறுதி செய்வதற்காக அனைத்து துறைகளிலும் பாலின வரவு செலவு திட்டம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிட்டு அதனை தொடர்ந்து அரசால் அரசாணை எண். 38 நாள்.08.07.2022 அன்று வெளியிடப்பட்டு, பாலின நிதி நிலை அறிக்கை அனைத்து துறைகளிலும் அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த ஆணை வெளியிடப்பட்டது.

சமுதாயத்தில் பெண்களுக்கான சமவாய்ப்புகளை நல்கி அவர்களை எல்லாத்துறைகளிலும் வெற்றியடையச் செய்து அதிகாரமளித்தலை உறுதி செய்வதில் தமிழக அரசு முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழக அரசு பெண்களின் மேம்பாட்டிற்காக சமுதாயத்தில் பெண்களுக்கு சமவாய்ப்பு அளித்து பொருளாதார மேம்பாட்டினையும், அடிப்படை உரிமைகளையும் உறுதி செய்வதற்கு பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

நிர்வாகத்தின் அனைத்து துறைகளிலும் பாலின சமத்துவத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. திட்டங்களை உருவாக்குவதன் அனைத்து நிலைகளிலும் பாலின கண்ணோட்டத்தை பின்பற்றுகிறது.

- மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தன்னிறைவு மற்றும் மேம்பாடு
- பெண்களின் கல்வி மேம்பாட்டிற்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் ரூ.370 கோடி நிதி ஒதுக்கீடு
- முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தில் ரூ.92.00 கோடி நிதி ஒதுக்கீடு
- முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் மற்றும் சத்துணவு திட்டம்
- பணிபுரியும் பெண்களுக்கு 10 தோழி விடுதிகள் செயல்படுகிறது
- பெண்களுக்கான உதவி எண்.181(24x7) மற்றும் கண்காணிப்பிற்கு ரூ.48.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு
- பெண்களுக்கு 4 திருமண நிதி உதவி திட்டங்களுக்கும் ரூ.98.16 கோடி நிதி ஒதுக்கீடு
- திருநங்கைகள் நல வாரியத்திற்கு ரூ.5.70 கோடி நிதி ஒதுக்கீடு
- அன்னை சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்திற்கு ரூ.2.08 கோடி நிதி ஒதுக்கீடு
- பெண்கள் பாதுகாப்பு மற்றும் சேவைக்கு ஒருங்கிணைந்த சேவை மையம் ரூ.11.58 கோடி நிதி ஒதுக்கீடு(24x7)
- மகளிர் அதிகாரமளித்தல் மையம் மாநிலம் மற்றும் மாவட்டங்களில் பெண்களுக்கான திட்டங்களை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.12.44 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

2022–23 ஆம் நிதியாண்டில் பாலின வரவு செலவு திட்ட பயிற்சிக்காக ரூ.5.11 இலட்சம் நிதி மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து துறை சார்ந்த 100 அலுவலர்களுக்கு 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து இன்றைய தினம் அரசுத்துறைகளை சார்ந்த 50 அலுவலர்களுக்கு 3 நாட்கள் பாலின வரவு செலவு திட்ட பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சிகள் அரசு பணியாளர்களுக்கு இது குறித்து திறன்களை மேம்படுத்திட உதவுகின்றது.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை களப்பணியாளர்களுக்கு சமூகநலத்துறை திட்டங்கள் மற்றும் சட்டங்கள் குறித்த வழிகாட்டி கையேடு வழங்கப்படுகிறது.

அனைத்து துறை அலுவலர்களுக்காக பாலின வரவு செலவு திட்டப்பயிற்சி மற்றும் மாவட்ட சமூகநல அலுவலர்கள் / மாவட்ட திட்ட அலுவலர்களுக்கான அடிப்படைப்பயிற்சி மாண்புமிகு சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்களால் துவக்கி வைக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அரசு செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன் இ.ஆ.ப., அவர்கள், சமூகநலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி இ.ஆ.ப., அவர்கள், நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலைய இயக்குநர் திரு. க.சுரேஷ் அவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக திருமதி க.ஜெயலட்சுமி கூடுதல் இயக்குநர் (சமூகநலத்துறை) வரவேற்புரை ஆற்றினார். திருமதி ச.ரூத் வெண்ணிலா, இணை இயக்குநர் (குழந்தை நலம்) சமூகநலத்துறை நன்றியுரை ஆற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu